1990 மே 8]

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்துக்கு அருகில் இருந்து கொண்டிருக்கிற என்னுடைய சாத்தான்குளத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று வெகு நாட்களாக கோரிக்கை வைத்து இருக்கிறோம். அந்த மருத்துவமனை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவாவது ஆவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் மருத்துவமனையைப் பற்றிய அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் இப்படித் தனியாகக் கேள்வி கேட்கிற நிலைமையை உண்டாக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

* 2520 திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கோட்டை தாலுகா தெற்குமேடு பஞ்சாயத்து பகுதியில் வாழுகின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது எடுப்பதற்கில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தெற்குமேடு என்கிற கிராமம் புளியரை என்ற கிராமத்தோடு இணைந்து இருக்கிறது. ஒரே தெருவிலே ஒரு பக்கம் புளியரையும், இன்னொரு பக்கம் தெற்குமேடும் இருக்கிறது. தற்போது ஒரு பக்கம் மட்டும் பாதுகாக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தெருவிலே அடுத்த பக்கத்திலே இருக்கிற மக்களுக்கு அந்தத் தண்ணீர் வழங்கப்படவில்லை. எனவே அந்தப் பகுதியிலே சட்ட ஒழுங்குப் பிரச்சினைகூட வருவதற்கு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதை வேகமாகப் பரிசீலனைச் செய்து அமல்படுத்துவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது குடிநீர் ஆதாரமே இல்லாத பகுதிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, குடிநீர் கொடுக்கப்படுகிறது. ஓரளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களை அடுத்தக் கட்டமாக எடுத்துக் கொண்டு, அவற்றைச் செயற்படுத்த அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தினைக் கொண்டு, விரைவிலே அங்கே குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

9-45 மணி

சித்த வைத்தியக் கல்லூரி

* 5496 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் சித்த வைத்தியக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொல்லிமலை மூலிகைகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எனவே அங்கே சித்த வைத்தியக் கல்லூரி அமைத்தால் படிப்பவர்கள் நேரடியாக மூலிகைகளைத் தெரிந்து கொண்டு, படிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே அங்கே ஒரு சித்த வைத்தியக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தமிழகத்திலே 2 இடங்களிலே சித்த வைத்தியக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டையிலே ஒன்றும், பழனியிலே ஒன்றும் நடைபெற்று வருகின்றன. இருக்கிற சித்த மருத்துவக் கல்லூரிகளை விரிவுபடுத்தி, அந்த மருத்துவ மனைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தத்தான் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதை அதிகப் படுத்துவதற்கான முயற்சிகளை அரசு பரிசீலிக்கும். இப்போது இந்த இரண்டு மருத்துவமனைகளையும் விரிவுப்படுத்தி, அவற்றைத் திறமையாகச் செயற்படுத்தவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.